கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5–7–2018), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

104. 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) விதிகளை இயற்றியது குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல(Z2)த் துறையின் 1–6–2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 206–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1997) 14(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

105. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 8(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

2018 ஜூலை 4]

106. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [*1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *33/1982*) *8*(*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

107. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [*1974* ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் *6/1974*) *39*(*2*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

267. மானியக் கோரிக்கை எண்*4*–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2018–2019.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

268. “போக்குவரத்துத் துறையின் செயல்திறன், *2018*” என்கிற சிறுநூல். (தமிழ்)

269. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2018–2019.* (தமிழ்)

———